# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Al-Ain, UAE



தென்னிந்திய தமிழ் திருச்சபை அல்யென்

# C.S.I. TAMIL PARISH ALAIN, UAE

| REGULAR SERVICE | BIBLE STUDY | CHILDRENS BIBILE SCHOOL |
|---|---|---|
| FRIDAY'S<br>6:30 PM – 7:30 PM<br>CHURCH<br>MAIN HALL<br><br>EVANGELICAL CHURCH CENTRE,<br>KENAD HOSPITAL CAMPUS,<br>ALAIN, UAE | WEDNESDAY'S<br>7:30 PM – 8:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: REV. S. P. BASKAR<br>056 7668 343 | FRIDAY'S<br>4:00 PM – 5:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. AUGUSTA LAWRANCE<br>056 641 1676 |
| **MEN'S FELLOWSHIP** | **WOMEN'S FELLOWSHIP** | **YOUTH FELLOWSHIP** |
| 2'ND THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. ASHOK KUMAR<br>050 842 9659 | 3'RD THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. SHALY MELBIN<br>056 394 1817 | 4'TH THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. SANTHOSH KUMAR<br>056 875 2723 |


## OTHER MEETINGS – VIA ZOOM

MONTHLY FASTING PRAYER: 1ST FRIDAY 11:AM TO 1:00PM

MONTH END/NEW MONTH STARTING PRAYER: (LAST DAY OF MONTH) 11:30 PM TO 12:30 PM

FOR MINISTRY DETAILS & ENQUIRES – PLEASE CONTACT

REV. S.P. BASKAR, THE PRESBYTER
CSI TAMIL PARISH ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
**Email: csitcalain@gmail.com** | **Web: csitamilparishalain.org**




கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**....என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். ஏரேமியா:**33:3

Call to me and I will answer you, and will tell you great and hidden things that you have not known...Jeremiah:33:3

ஆண்டவரை நோக்கி கூப்பிடும்போது;

சௌக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி அவர்களுக்கு சமாதானத்தை கொடுப்பார்...

எல்லாம் அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து அவர்களின் அக்கிரமங்களை மன்னிப்பார்...

மகிழ்ச்சியும், கீர்த்தியும், புகழ்ச்சியும் அருளுவார்...

ஆண்டவரை நோக்கி பார்த்து இவைகளை பெற்றுக்கொள்ள நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்...

இந்த மாதத்தில் (அக்டோபர்) முதியோர் தினம் அனுசரிக்க அழைக்கப்படுகிறோம்.. நம்முடைய முன்னோர்கள், மூத்த பெற்றோர்கள் அவர்களின் வாழ்வுக்காகவும், அனுபவங்களுக்கும் கடவுளை நோக்கி ஜெபிக்கவும் அவர்களை வாழ்த்தவும், கடவுளுக்கு நன்றி செலுத்தவும் அழைக்கப்படுகிறோம்.....

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கிறோம். இந்த கோவிட் காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குறிப்பாக வேலை இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..

தொடர்ந்து நமது திருச்சபையில் Zoom வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக... உயர் கல்விக்கு சொல்லுகின்ற நமது பிள்ளைகளுக்காக ஜெபிக்கவும் வாழ்த்தவும் அழைக்கப்படுகிறோம்....

அத்துடன் நமது திருச்சபையில் வருகின்ற காலங்களில் நடக்க இருக்கின்ற அனைத்து நிகழ்ச்சிகளுக்காக குறிப்பாக கிறிஸ்து பிறப்பின் நாளின் நிகழ்ச்சிகளுக்காக ஜெபிக்குமாறு அழைக்கப்படுகிறோம்...

மேலும் இந்த கொரோனா என்ற கொள்ளை நோயில் இருந்து தேசங்கள் விடுவிக்கப்பட ஊக்கமாய் ஜெபிக்கும்மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்...

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்........

*Rev. S. P. Baskar...*







# ஆண்டவர்மீது தளராத நம்பிக்கை

கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம்
சங்கீதம் 11:7

**For the LORD is righteous; he loves righteous deeds; the upright shall behold his face.**
**Psalm 11:7**

முன்னுரை: சங்கீதம் 11 ஆண்டவர்மீது ஆழ்ந்த நம்பிக்கை (அ) விசுவாசம் வைக்க கற்றுக்கொடுக்கும் சங்கீதம் ஆகும். ஆண்டவர்மீது அசையாத நம்பிக்கை வைக்க அழைக்கின்ற சங்கீதம் ஆகும். எல்லா இடையூறுகளிலும், கஷ்டங்கள் மத்தியிலும் இருக்கும்போது ஆண்டவரை பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தும் சங்கீதம் ஆகும். சவுலினால் துன்புறுத்தப்பட்ட தாவீது மனம் தளர்ந்த நிலையில் ஆண்டவரிடம் தளராத நம்பிக்கை வைத்து பாடப்பட்ட பாடல் ஆகும்.. ஆண்டவர் தூய கோவிலில் இருக்கிறார், அவரது பிரசன்னம் நம்மை பாதுகாக்கின்றது என்பதை உணர்த்தும் சங்கீதம் ஆகும். எனவே இது கோவிலின் சூழலிலே அமைந்த பாடலாகும்...

> Psalm:11
>
> This Psalm describes the Confidence that the faithful may have, even in times of severe crisis....

சங்கீதம் 11:1-3: தாவீதின் நெருக்கடியான சூழ்நிலை

வச:1-நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன்.... என்பது கடவுள் எனக்கு துணை, அவரே என் தஞ்சம் என்று நெருக்கடியான சூழலில் தாவீது ஆண்டவர் மீது கொண்டுள்ள விசுவாசத்தைக் காண்பிக்கின்றது.

.......நீங்கள் என் ஆத்மாவை நோக்கி... என்பது அவரது (தாவீது) நண்பர்களைக்குறிப்பதாகும் (அ) தாவீதின் அச்சமும், திகிலும் கொண்ட சூழலை காண்பிக்கிறது....

.....பறந்துப்போ என்று சொல்லுகிறீர்கள்.... என்பது தீயோரின் தீய திட்டங்களிலிருந்து தப்பித்து செல் என்று தாவீதை நோக்கி நண்பர்கள் கூறுவது ஆகும்.. பறவைகள் உயர்ந்த மலைகளுக்கு பறந்து செல்வது என்பது வேடர்களிடம் இருந்து தப்பிப்பதற்காகவும்.. அதுபோன்று

நல்லவர்கள் ஓடி விடவும் அழைப்பது ஆகும்.. இவை ஆண்டவர் மலைகளில் இவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பவர் என்ற நம்பிக்கை தருவதாகும்...

சங்கீதம் 11:4-7: ஆண்டவரின் பிரசன்னத்தில் தாவீதின் நம்பிக்கை
வச:4 கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்.... இது எருசலேம் திருக்கோவில், அங்குள்ள உடன்படிக்கைப் பெட்டி (அ) கடவுள் தங்கும் சிங்காசனம் என்பது பரலோகத்தை குறிப்பதாகும்... கடவுளின் சிங்காசனம் என்பது விண்ணகத்தில் (பரலோகத்தில்) இருக்கிறது. அவரது பிரசன்னத்தினால் நம்மை காப்பார் என்ற நம்பிக்கை ஆகும்...

வச:6- துன்மார்க்கர் மேல் கண்ணிகளை வர்ஷிக்கப் பண்ணுவார்; அக்கினியும், கந்தகமும், கடுங்கோடை கொந்தளிப்பும்.... இது கடவுளின் தண்டனையைக் குறிக்கும் சொற்களாகும்.... இது சோதோம், கோமொரா பட்டணங்களின் அழிவை நினைவுப்படுத்துகின்றது. (ஆதி:19) ஆண்டவரின் கோபத்தின் கிண்ணம் என ஏசாயா தீர்க்கதரிசி கூறுவதாகும்.(ஏசாயா:5:17)

நல்லவர்களுக்கு தன்னையே குடிக்கும் கிண்ணமாகவும், பானமாகவும் அளிக்கும் ஆண்டவர், தீயோர்க்கு அக்கினியும், கந்தகமும் குடிநீராக அளிப்பார்...

வச:7 கர்த்தர் நீதியுள்ளவர்...அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது... துன்பம், துயரத்தின் மத்தியிலும் ஆண்டவரின் பிரசன்னம் அவர் தரும் மகிழ்ச்சி அவருக்குள் நம்பி நீதியுடன், உண்மையுடன் வாழ்வோருக்கு அமைதி தரும். செம்மையானவர்கள் கடவுளின் முகத்தை காண்பார்கள் என்பதாகும்...

நிறைவா: கஇன்றைக்கு நாமும் எந்த சூழ்நிலையிலும் ஆண்டவரின் மீது தளராது நம்பிக்கை கொண்டு உண்மையும் நீதியும் உள்ள செம்மையானவர்களாய் வாழ்ந்து கடவுளின் முகத்தை காண அவருடைய பிரசன்னத்தை உணர அழைக்கப்படுகிறோம்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக...
ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்...

Rev.S. P. Baskar




# JUST BELIEVE

# யோ கெபேத்
# (Jochebed)



**அம்ராம் தன் அத்தையாகிய யோகெபேத்தை விவாகம் பண்ணினான்; அவள் அவனுக்கு ஆரோனையும், மோசேயையும் பெற்றாள்; அம்ராம் நூற்று முப்பத்தேழுவருஷம் உயிரோடிருந்தான். —யாத்திராகமம்: 6:20**

Amram took as his wife Jochebed his father's sister, and she bore him Aaron and Moses, the years of the life of Amram being 137 years. Exodus: 6:20

**முன்னுரை:** யோகெபேத் மோசேயின் தாய் ஆவார்.. மோசே பிறந்த காலத்தில் மனம் கல்லாய் போன பார்வோன் பிறக்கும் ஆண் குழந்தைகளை நைல் நதியில் எறிந்துவிடச் சொல்லிய கட்டளைக்கு அடிபணிய மருத்து சிப்பிராள், பூவாள் ஆகியோருடன் மோசேயின் தாயாகிய யோகெபேத் தன்னை இணைத்துக் கொண்டு தம்முடைய குழந்தையைத் தாமே மறைத்து வளர்கிறாள். இப்படிப்பட்ட நெருக்கடிகளைச் சந்தித்து மோசேயை காப்பாற்றி இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பணிக்காக ஆயத்தப்படுத்திய துணிச்சல் உள்ள தாய் யோகெபேத் ஆவார்....

## யோகெபேத் துணி உள்ள தாய்

மோசேயை வயிற்றில் சுமந்து அந்த உயிருக்கு உணர்வு கொடுத்து, தம் உதிரத்தைக் கொண்டு உயிர் வளர்த்து வலியைத் தாங்கிப் பெற்றெடுத்த தம் மகன் மோசேயை மூன்று மாதங்கள் ஒளித்து வைத்து வளர்த்திருக்கிறார். இந்தத் துணிவும், துணிச்சலும் கடவுளிடமிருந்து பெற்றவர் யொகெபேத் ஆவார்.....

## யோகெபேத் கடவுளின் வல்லமையை பெற்ற தாய்

தன் மகனை மூன்று மாதங்கள் பாதுகாப்புடன் வைத்திருப்பதற்கு யொகெபேத் கடவுளின் வல்லமையைப் பெற்று இருந்தார். யொகெபேத் என்பது யோகோவா என்னும் வேர்ச்சொல்லிலிருந்து வந்தவை ஆகும். கடவுள் தம்முடைய பெயரை மோசேக்கு வெளிப்படுத்தினார் (யாத்:3:14) என்று பார்க்கிறோம். கடவுள் தம் பெயரை "யாவே" என்னும் வேர்ச்சொல்லிருந்து "யேகோவா" என்னும் பெயர் வருகின்றது என்று அறிவோம்.

அப்படியானால் "யோகெபேத்" (Jochebed) என்னும் பெயரும் அதிலிருந்துதான் வருகின்றது என்பதாகும். "யொகெபேத்" என்பதின் பொருள் (Glory of Jehovah) யாவேயின் மாட்சிமை என்று அர்த்தம் ஆகும். இவ்வாறு கடவுளின் பெயரை தாங்கி இருப்பதால் இவருக்கு துணிவு வந்தது என்றும், கடவுளின் வல்லமையை பெற்றவர் என்ற பெயரும் இவருக்கு கிடைத்தது....

**முடிவுரை:** இன்றைக்கு நாமும் கடவுளின் விடுதலைப் பணிக்கு என்று நம்மை அர்ப்பணிக்கவும், கடவுளின் பணிக்காக கடவுளின் வல்லமையைப் பெற்று துணிச்சலுடன் வாழ கடவுளின் பணியைச் செய்ய அழைக்கப்படுகிறோம்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயரம்மா..
Mrs. E. Nancy Baskar...






மோசேயைக்குறித்து அதிகமாக தெரிந்து வைத்திருக்கும் கிறிஸ்த்தவர்களாகிய நாம் அவரின் குடும்பத்தாரைக்குறித்து அறியாதிருப்பது வருத்தமானதே. அதை கீழ்காண்கிற வேதத்தின் அடிப்படையில் தெரிந்துகொள்வோம்.

மோசேயின் தகப்பனாரின் பெயர் **அம்ராம்.** அவருடைய தாயார் பெயர் **யோகேபெத்** என்பதாகும். (யாத் 6:20). அவருடைய சகோதரி **மிரியாம்.** மோசேயைவிட பலஆண்டுகள் மூத்தவர் என்று யாத்திராகமம் 2:4 முதல் 8 வசனங்களில் காண்கிறோம்.

மேசேயின் சகோதரராகிய **ஆரோன்** அவரைவிட மூன்று வயது மூத்தவர் என்று யாத்ராகமம் 7:7 கூறுகிறது.

மோசே எகிப்தினுடைய தர்க்க சாஸ்திரங்களை கற்று தேர்ந்த மூத்த பண்டிதர் என்று அப்போஸ்தலர் 7:22 கூறுகிறது. மோசேயின் மாமனார் **எத்திரோ** என்னும் **ரெகுவேல்** மீதியான் தேசத்து ஆசாரியன். இவர்களின் ஏழு குமாரத்திகளின் ஒருத்தியாகிய **சிப்போராள்** என்பவளை மனைவியாக மோசே கொண்டார். மோசேக்கு **கெர்சோம், எலியேசர்** என்று இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். (1 நாளாகமம் 23:15)

மோசேயின் ஊழியத்தில் உறுதுணையாக இருந்த **ஊர்** என்பவர் மோசேயின் சகோதரியாகிய **மிரியாமின்** கணவராக இருக்கலாம் என்று சில பண்டிதர்கள் கூறுகின்றனர் கருதுகின்றனர். நாற்ப்பது ஆண்டுகள் அரண்மனையிலும், நாற்ப்பது ஆண்டுகள் ஆடு மேய்பதிலும், நாற்ப்பது ஆண்டுகள் அற்புதம் செய்யும் மாபெரும் ஊழியத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மோசே 120 வயதில் மரித்தார். (உபாகமம். 34:7).

# KORIJHOLLA CHURCH PROJECT

# கொரிஜ்ஹோலா ஆலையத் திட்டம்






கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபையின் அங்கத்தினர்களே, நமது திருச்சபையின் ஆண்கள் சங்கம் மூலமாக ஒடிசா மாநிலத்தின் கொரிஜ்ஹோலா கிராமத்தில் தேவாலயம் கட்ட முதற்கட்ட பணிகள் தொடங்கியாயிற்று. தற்ப்போது கனமழையின் காரணமாக ஆலைய வேலைகள் தொடரமுடியாத சூழ்நிலை உருவாகினாலும்; முன்னே ஒற்றை அடி பாதையாகயிருந்த சாலைகள் இப்போது அரசின் சார்பாக பெரிய வாகனங்கள் செல்லும் வகையில் விரிவாகம் செய்யப்பட்டிவருகிறதை காணமுடிகிறது. இது நம் ஆலைய கட்டுமானத்திற்கு பெரும் வசதியாயிருக்கும். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

**கர்த்தருடைய ஆலயத்தை இணைந்து கட்ட அனுதின ஜெபத்தாலும் ஒன்றிணைவோம்.**

## இணைந்து கட்டுவோம் வாருங்கள்

# தமிழும் - தமிழ்நாடும்

**சொற்பிறப்பியல் (Etymology):** வைதீக ஆரியர்கள் தென்னிந்தியாவில் விந்திய மலைக்கு தெற்கேயுள்ள மக்களை குறிப்பிட “திராவிட” என்ற சொல்லை சமஸ்கிருதத்தில் பயன்படுத்தினார்கள். தமிழ் உச்சரிக்க முடியாத பிற மொழியாளர்கள் திராவிட.. தம்மிரிக..திரமிள..திராவிடம் என்று உண்டாயிற்று. திராவிட என்ற வார்த்தை ஒலி திரிப்படைந்தே தமிழ் என்ற சொல் உருவாயிற்று என்று இராபர்ட் கால்டுவெல் தனது திராவிட அல்லது தென்னிந்திய குடும்பம் மொழிகளின் ஒப்பிலக்கணதில் குறிப்பிட்டிருந்தார்.

**வடமொழிகளில் சான்றுகள்:** இதற்கு சான்றாக ஒரிசாவில் புவனேஸ்வரம் அருகில் கிமு2’ம் நூற்றாண்டில் கலிங்க பேரரசர் காரவேலன் மூவேந்தர்களை குறிப்பிடுவதற்காக திரமிரா என்று பிராகிருத மொழியில் குறிப்பிட்டுள்ளார். இதுதான் முதல் சான்று ஆகும். கிபி1’ம் நூற்றாண்டில் பௌத்த லலிதாவிசுந்தர நூலில் திராவிடலிபி என்று பிராகிருத மொழியில் அழைக்கப்பட்டுள்ளது. இதே காலத்தில் காலகட்டத்தில் சமயவயங்கா சுத்தா என்ற சமண மத நூலில் தாமிலி என்று பிராகிருத மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழ் ஆய்வாளர்கள் கூற்று:** இக்காலத்தில் இருந்த 18 மொழிகளில் சமஸ்கிருதம் குறிப்பிடப்படவில்லை ஏனெனில் சமஸ்கிருதத்தின் முதல் கல்வெட்டு கிபி 150l குஜராத்தின் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது ஆகவே தமிழ் என்ற சொல் மருவிய தமிழர் திராவிடம் திராவிடம் திராவிடம் திராவிடம் என்று சமஸ்கிருதத்தில் உருவானதாக முதன்முதலில் தமிழறிஞர் பாவாணர் 1902 முதல் 1981 கூறுகின்றார் ஆனால் இவருடைய கூற்றுக்கு போதிய ஆதாரம் இல்லை என்று மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

**தமிழ் நாட்டின் எல்லைகள்:** வடக்கு பகுதியில் விந்தியா மலை (மத்திய பிரதேசம்) மற்றும் சத்புரா மலை (குஜராத்) நிலப்பரப்பு ஆகியவற்றின் எல்லையாகக் கொண்டு பண்டைய தமிழ்நாடு தனித்துவமான புவியியல் அமைப்பைக கொண்டிருந்தது. இந்தியாவின் வடக்கே இமயமலை பாதுகாப்பான அரணாக இருந்ததால்; பண்டைய தமிழ்நாட்டின் நிலப்பகுதியை யாராலும் எளிதில் கைப்பற்ற முடியாத நிலையில் இருந்தது இதனால் தமிழ் மண்ணும், மொழியும் கலாச்சாரமும், பண்பாடும் பகைவர்களால் நெருங்க முடியாமல் பாதுகாப்பாக இருந்தது.

**தமிழ் மொழியின் சிறப்பு:** உலகின் மிகப் பழமையான மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழக நாகரீகமான திராவிட நாகரீகம் உலகின் மிகப் பழமையான நாகரீகம். திராவிட மொழிகளின் தாய் மொழியான தமிழ் மொழியை, இந்திய துணைக்கண்டத்தில் திராவிட மொழியியல் குடும்பத்தில் 80 மொழிகளை சுமார் 22 கோடி மக்கள் பேசி வருகின்றார்கள். இதில் அதிக மக்களால் பேசப்படுவது தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகியவை இதில் இந்திய மொழிகளில் தமிழ் மொழியில்தான் சமஸ்கிருதம் கலக்காத இலக்கியங்கள் இருக்கின்றன.

வரலாறு தொடரும்..

MEN'S FELLOWSHIP ARTICLE BY: MR. KINGSLY STUBERT




The best way to summarize is to say, “God is able’’.

When impossibilities try to block your way to where God wants you to be, remember God is able. In this world there will be tribulations and persecutions. But here’s the good news about being a Christian, you are not fighting the battles on your own, God’s power is at work within you to accomplish the purpose He has called you. Regardless of how unimaginable the trials may be, God is able to surpass everything that discourages us. His power has been tested and proven.

Look at our surroundings and the skies above, for they are the work of his hand. So, the next time the enemy attacks with discouragement and negativity, share it with the Lord and know He is by our side. Currently we live in a pandemic period and uncertain times, but we have nothing to fear. I will say of the Lord, He is my refuge and my fortress my God in whom I trust” **(Psalm 91:2).**

The one who controls the wind, and the waves also controls every part of our lives. And no matter how much it seems that evil is taking over the world, God wins in the end. Rejoice always, pray continually, give thanks in all the circumstances for this is God’s will for you in Jesus Christ” **(1 Thessalonians 5:16-18).**

Life will always have its challenges. People will have an unrealistic expectation, work will be stressful, relationships will get strained, finances will rise and fall, the future may appear bleak.

**Yet, God remains:**

**He is with you (Math: 28:20)**
**He cares for you (1 Pet5:7)**
**He is faithful (1 Cor 1:9)**

**Go to him**

**He is listening (Jer29:12)**
**He does care (1 Pet 5:7)**
**He is with you (Is 41:10)**

We don’t have to be afraid of How He’s going to shape our lives. He is the God who makes everything beautiful in its time.

GOD IS WELL ABLE

WOMEN’S FELLOWSHIP ARTICLE

BY: MRS. SUGITHA PRAVEEN

# கர்த்தரை தேடுங்கள்

இந்த உலகத்தில் மனிதன் பல காரியங்களைத் தேடி அலைகிறவனாய்க் காணப்படுகிறான். தன்னை இரட்சிக்காதவைகளுக்காக வாஞ்சித்து ஓடுகிறான். ஆனால் வேதம் சொல்லுகிறது **கர்த்தரைத் தேடுங்கள் என்று. நம்முடைய வாழ்க்கையில் எல்லாவற்றிலும் தேவனை முதன்மையாக வைத்து, அவரைத் தேடுவது மிக அவசியம்.**

இன்றைக்கு அநேக மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் தேவனைத் தேடாமல், உலகத்தையும் ஐஸ்வரியத்தையும் மற்றவைகளையும் தேடிக்கொண்டிருக் கிறார்கள்.

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடும்பொழுது நம்முடைய தேவைகள் எல்லாவற்றையும் அவர் சந்திக்கிறவராய் இருக்கிறார்.**

**கர்த்தரைத் தேடுங்கள்** அப்பொழுது பிழைப்பீர்கள் என்று வேதம் சொல்லுகிறது. இந்த உலகத்தில் நம்முடைய ஆத்துமா தேவனுக்கு முன்பாக உத்தமமாய் வாழக்கூடிய ஒரு வாழ்க்கையை நாம் தெரிந்து கொள்வது மிக அவசியம். இந்த அழிந்து போகிற சரீரத்தை நாம் முக்கியப்படுத்தி, அதை நாம் மைய்யமாகக் கொண்டு வாழும்போது, நம்முடைய ஆத்துமாவின் பாதிப்பு எவ்வளவு பயங்கரமானது! நித்திய ஆக்கினைக்குள்ளாக நம்முடைய ஆத்துமா சென்று விடும். நாம் நம்முடைய வாழ்க்கையில் தேவனைத் தேடுவோம். **அப்பொழுது நாம் பிழைத்திருப்போம். நம் முழு பெலத்தோடு, முழு மனதோடு, முழு இருதயத்தோடு அவரைத் தேடுவோம்.** அப்பொழுது நாம் ஆத்துமாவில் பிழைத்திருப்போம். நீதியின் மேல் பசி தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள் என்று வேதம் சொல்லுகிறது. தேவனுடைய காரியங்களில் மெய் சமாதானம் உண்டு. ஆனால் இந்த உலகத்தின் காரியங்களை தேடும்பொழுது அதில் வருத்தமும் வேதனையும் தேவன் வைத்திருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த **உலகம் நித்தியமாய் அழிந்துப்போகக் கூடியது. நாம் தேவனைத் தேடிப் பிழைக்கும்படியாக அவர் நமக்கு உதவி செய்வாராக.**




**YOUTH FELLOWSHIP ARTICLE**

## HIS STORY, OUR STORY
## HIS STRUGGLE, OUR STRUGGLE

# Jonah's

The Book of Jonah, one of the best known of the biblical tales, is much more than a children's fable about a man and a whale. This brief narrative about a prophet who refuses to *be* a prophet is *our* story how we too often give in to our nature which pulls us toward resentment, parochialism, and narrowness, too often avoid what we need to face within ourselves and our responsibilities, too often are crippled by our inability to transcend our anger and forgive.

After examining Aviva Zornberg's analysis of the Book of Jonah in which she argues that the message, like the latent dream à la Freud, is obscure, I argue that the meaning of the Book of Jonah is clear. Psychic unity requires that we face our objects God and conscience, Nineveh and storm and mother, self and other struggle with them, stare at them, allow them to breathe and live in the same room. As God, Jonah's "psychoanalyst," argues, it is only then that we can find our way to where his analysand Jonah never quite arrives forgiveness of the self and of the other.



**BY LOKESH - CBS TEENS**




சிறிய தீர்க்கதரிசன நூலுக்குள் மூன்றாவது புத்தகம் ஆமோஸ் இந்நூல் கிமு 755’க்கும் கிமு660’ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதி முடிக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று வேத அறிஞர்கள் சொல்கிறார்கள். இந்நூல் மொத்தம் ஒன்பது அதிகாரங்களைக் கொண்டது.


பெத்லகேமுக்கு தெற்கே சுமார் 10’மைல் தொலைவில் இருந்த தெக்கோவா என்று அழைக்கப்பட்ட ஒரு குக்கிராமத்தில் ஒரு ஏழை மேய்ப்பன் வாழ்ந்து வந்தான். ஏழைகளின் உணவான காட்டத்தி மரங்களின் பழங்களை பொறுக்கி விற்று; அதன் மூலம் வந்த கொஞ்சம் வருமானத்தில் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தான். ஏழையாய் இருந்தாலும் தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனைகளின் படி நடக்க ஜாக்கிரதையுள்ள ஒரு மனிதனாய் இருந்தான். அவனுடைய தேசமாகிய யூதாவில் உசியா ராஜா ஆட்சி செய்து கொண்டிருந்த காலம் அது; அண்டை நாடாகிய இஸ்ரவேல் ராஜ்யத்தில் இரண்டாம் ஏரோபியாவின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

இஸ்ரவேலில் சமாதானமும் செல்வ செழிப்பும் நிலவினாலும் ஜனங்களின் பாவங்கள் மிகவும் கொடியதாக இருந்தது. தேசத்து ஜனங்களும், அரசனும் தேவனுடைய கற்பனைகளை விட்டு விலகி தங்கள் இஷ்டப்படி வாழ்ந்து வந்தார்கள். சமுகத்தில் உயர்நிலையில் இருந்தவர்களால் தரித்திரர்கள் மிகுதியாய் ஒடுக்கப்பட்டார்கள். விக்கிரக ஆராதனை என்னும் பெரும் பாவம் தேசத்தில் தலைவிரித்து ஆடியது. அந்த சூழ்நிலையில் ஜனங்களை உணர்வடைய செய்யயும், வரவிருக்கிற நியாயத்தீர்ப்பை குறித்து எச்சரிக்கவும் தேவன் இந்த தெக்கோவா ஏழை மேய்ப்பனை தீர்க்கதரிசியாக அழைத்தார். அவருடைய பெயர் ஆமோஸ். இவன் யூதாவை சேர்ந்தவனாக இருந்தாலும்; தேவன் இவனை இஸ்ரவேலுக்கு தீர்க்கதரிசனம் உரைக்கும் படி தெரிந்து கொண்டபடியால்; இஸ்ரவேல் நாட்டில் போய் அங்கே வாழ்ந்து தீர்க்கதரிசனம் உரைத்தான். அந்த ஆமோஸ் உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகளும், அவன் கண்ட தரிசனங்களின் தொகுப்புமே ஆமோஸ் தீர்க்கதரிசன புத்தகம் என்று சொல்லலாம்.

ஆமோஸ் ஏசாயாவை போல் ராஜ வம்சத்தில் பிறந்தவன் அல்ல, எரேமியாவைப்போல் ஆசாரிய குடும்பத்தில் பிறந்தவன் அல்ல, ஏழையாய் இருந்தாலும் தேவன் தனக்குக் கொடுத்த வார்த்தைகளை ஜனங்களுக்கும் அரசவைக்கும் தைரியமாய் சொல்வதற்கு அவன் கொஞ்சமும் தயங்கவில்லை. எந்த நிலையில் இருக்கும் மனிதனையும் பயன்படுத்த தேவனுக்கு முடியும் என்பதற்கு ஆமோஸ் ஒரு சாட்சி. துயர் துடைப்பவர் என்ற தனது பெயரின் பொருளை தனது வாழ்க்கையில் பிரதிபலித்த ஆமோஸ் மக்களுக்காக இறைவனிடம் மன்றாடினார். ஆம் என் அருமை இறைஜனமே; ஆமோஸ் வழியில் நாமும் சென்று பிறரை இறையரசை நோக்கி பயணிக்க செய்து நாமும் பயணிப்போம்.

**நீங்கள் பிழைக்கும்படிக்குத்**
**தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது**
**நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய**
**கர்த்தர் உங்களோடே இருப்பார்.**


ஆமோஸ் / Amos 5:14




Article by:
Ms. Ajinsha & Ms. Sherinsha
D/o Mr. Silvester Solomon

# SODOM GOMORRAH








TEACH YOUR KIDS

# SODOM & GOMORRAH

Kids




# SODOM and GOMORRAH


primary

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| L | I | S | I | M | O | U | N | T | A | I | N | S | C | I | D |
| U | G | T | A | L | I | Q | U | A | T | U | E | R | I | T |
| L | O | A | N | G | E | L | S | T | E | M | D | I | T | O |
| N | M | L | D | A | M | C | O | N | S | E | Q | U | I | S |
| N | O | N | S | A | Q | U | D | E | S | T | R | O | Y | N |
| D | R | E | V | E | U | E | X | E | R | L | R | I | U | R |
| L | R | O | R | E | M | G | L | O | R | O | I | T | E | R |
| S | A | M | I | N | E | N | H | R | E | T | A | T | V | E |
| I | H | N | I | A | T | B | H | T | N | I | S | M | I | D |
| T | I | O | G | A | T | E | R | Z | E | D | A | M | L | S |
| Z | A | I | Q | U | A | T | N | O | N | R | E | C | T | O |
| T | O | E | D | O | L | O | R | E | D | E | S | I | Q | D |
| Z | R | A | T | B | R | E | A | D | G | A | I | T | V | O |
| L | A | O | R | E | M | O | L | O | R | S | I | T | E | M |
| V | I | S | I | T | O | R | S | R | E | T | A | T | V | E |

| | | |
|---|---|---|
| ANGELS | EVIL | MOUNTAINS |
| BREAD | GATE | SODOM |
| DAUGHTERS | GOMORRAH | VISITORS |
| DESTROY | LOT | ZOAR |




INTERMEDIATE junior



**Across:**

3. In what city did GOD tell Abraham; he was going to destroy Sodom & Gomorrah?
6. Lot's wife became a pillar of?
7. The wicked men who tried to get into Lot's house became?
9. How many daughters did Lot have?
10. How many righteous people were found in the city?
11. What was the name of Abraham's nephew?
12. Who did Lot offer to the wicked men that came to his house?

**Down**

1. What rained on Sodom and Gomorrah? _______and _______
2. What as the name of Lot's Oldest daughter's son?
4. What was the name of Lot's youngest daughter's son?
5. Who asked God whether he would destroy Sodom & Gomorrah if ten good men were found?
8. What city did Lot and his daughters flee to after Sodom & Gomorrah?

Questions ? Answers ?

# GENESIS 19 & 18

1. What is significant about Abraham's attempt to intercede for Sodom and Gomorrah?

SENIOR

2. Discuss the mob's reaction to the visitors?

3. Who was saved from the destruction of the city, who was not, and what is the significance of this?

4. What is indicated regarding the faith of Lot's daughters from their actions in Genesis 19:30-38

5. How can you use this lesson to grow spiritually and help others come into a relationship with Jesus?

# Manna Participants September

## Kids Colouring

JESIL BERNICE
HAZEL HARTLYN
REAGAN SHAN
CRASSLIN DEVONA
CHRIS GABRIEL
SHELBINO
JANIA PRENI
JOHAN SANJO
JEMIMA ASHNI
JEREMIAH

## Word Search

SHELBINO
AJINSHA
SHERINSHA
JOHAN SANJO
JASON ERIC
JEREMIAH
JONATHAN

## Mothers of Bible

AJINSHA
SHERINSHA
JASON ERIC
JOSHUA
JOSHIKA
JEREMIAH
JONATHAN

## Bible Quiz

ROSHAN
SHELBINO
AJINSHA
SHERINSHA
JASON ERIC
JOSHUA
JOSHIKA
JONATHAN




ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

***Email Subject:** Your name / Quiz type / Month-Year*

***To Church Email:** csitcalain@gmail.com*

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

**YOU CAN ALSO DOWNLOAD OUR MONTHLY MANNA BY VISITING OUR CHURCH WEBSITE**

***http://www.csitamilparishalain.org***

திருச்சபையின் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.




# OCT'21-QUESTIONS

1. யூதர்கள்---------------கேட்கிறார்கள், கிரேக்கர்--------------தேடுகிறார்கள்.
2. யார் மாம்சத்திற்குரியவர்கள்?
3. எத்தனை உபாத்தியாயர்கள்?
4. யார் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்திரிப்பதில்லை?
5. அறிவு----------------உண்டாக்கும், அன்போ---------------உண்டாக்கும்.
6. --------------------------------கர்த்தருடையது.
7. புருஷனுக்கு கனவீனமாய் இருப்பது எது?
8. எதில் குழந்தைகளாகவும், எதில் தேறினவர்களாக இருக்க வேண்டும்?
9. கிறிஸ்து உயிர்த்தெழுந்து யார்? யாருக்கு தரிசனமானார்?
10. பவுல் பெந்தேகோஸ்தே பண்டிகை வரை எங்கு இருப்பேன் என்றார்?

**செப்டெம்பர் ’மாத விடைகள் / எழுதியவர்கள்**

1. ரோமர்: 11:28 | 2. ரோமர்: 11:33 | 3. ரோமர்: 12:2 | 4. ரோமர்: 12:9
5. ரோமர்: 13:2 | 6. ரோமர்: 13:5 | 7. ரோமர்: 14:6 | 8. ரோமர்: 14:23
9. ரோமர்: 15:26 | 10. ரோமர்: 16:01

---

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், செல்வி. அஜீன்ஷா, செல்வி. ஷெறின்ஷா,
திருமதி. அகஸ்டா லாரன்ஸ், திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி. ஜெயின் ராஜவேல்,
திருமதி. ஜமுனா ராணி, திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. ஹெலன் கம்பீரம்,
திருமதி. பமீலா டேனியல், திருமதி. பிப்லின் நெல்சன், திருமதி. ரோஸ்லின் பாலாஜி,
திருமதி. ஹெப்சிபாய் நேசமணி, செல்வி. ஜோஷிகா வஷினி, செல்வி..ஜெரின் மேக்டலின்,
திருமதி. ஷெரின் டியென்ஷன், திருமதி. ஜெயந்தா ஜாண், திருமதி. அனிதா.எஸ்.ராஜன்

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**
**Your Name / Bible Quiz / Oct'21 | Sent to: csitcalain@gmail.com**

# Happy Birthday!

| | |
|---|---|
| 1-Oct | Mrs. Sheeba Derick W/o Mr. Derick Joy |
| 1-Oct | Mrs. Fanny Esther W/o Mr. Derin Joy |
| 1-Oct | Baby. H. Johanna Jane D/o Mr. Heavin Heba |
| 3-Oct | Baby. Smyrna Syntche D/o Mr. Santhosh Kumar |
| 4-Oct | Mr. Antony Lerinson S/o Mr. Antony Gerald |
| 4-Oct | Mr. Praveen Paul |
| 5-Oct | Mr. Immanuel Suthan S/o Mr. David Sorna Balan |
| 5-Oct | Baby. Nivina D/o Mr. Chandrasekar |
| 7-Oct | Mr. Sharvin John |
| 8-Oct | Ms. Akila D/o Mr. Ravi Chandran |
| 8-Oct | Baby. Janet Zaharina D/o Mr. Arun Kumar |
| 9-Oct | Ms. D. P. Mercy D/o Mr. Deva Prakash |
| 11-Oct | Mr. Prabu Dinesh Kumar |
| 13-Oct | Mrs. Anitha George W/o Mr. Geroge Rose |
| 15-Oct | Ms. Erline Bernice Raj D/o Mr. Saman Rajkumar |
| 15-Oct | Mstr. Jovin S/o Mr. Geroge Rose |
| 15-Oct | Mr. Godson Daniel Rao S/o Mr. Danesh Rao |
| 17-Oct | Mrs. Sahila Grace Justin W/o Mr. Justin Oliver |
| 17-Oct | Ms. Akshaya Kannan D/o Mr. A.S. Kannan |
| 18-Oct | Mrs. Helen Hemabai W/o Mr. Jayan Dharmaraj |
| 20-Oct | Mr. Aidean Joyphonse Derick S/o Mr. Derick Joy |
| 20-Oct | Mrs. Patricia Santhi W/o Mr. Jason Samuel |
| 22-Oct | Mrs. Sheeba W/o Mr. Deva Prakash |
| 23-Oct | Baby. B.N Kariss Angelo D/o Rev. S.P Baskar |
| 23-Oct | Mrs. Biblin Christabel W/o Mr. Nelson Sopitharaj |
| 24-Oct | Mr. Justin Oliver |
| 24-Oct | Baby. Jemimah. A D/o Mr. Ashok Kumar |
| 27-Oct | Mr. Jayan Dharmaraj |
| 29-Oct | Ms. Abigail Christine D/o Mr. Praveen Paul |
| 31-Oct | Mstr. Eion Jayden S/o Mr. Jason Samuel |

October

MAY THE LIGHT OF THE LORD JESUS SHINE THROUGH YOU ON YOUR BIRTHDAY




# HAPPY Anniversary

5th Oct
Mr. Ravindra & Mrs. Sunitha

6th Oct
Rev. S.P Baskar & Mrs. Nancy Angelo

11th Oct
Mr. Daniel DuraiSingh & Mrs. Pamela Rachel

21st Oct
Mr. Prabhu Dinesh Kumar & Mrs. Rebecca

"உலகம் முழுவதும் உள்ள மூத்த குடிமக்களின் உரிமைகளை மதிக்க, அவர்களின் நலனை பாதுகாத்து போற்ற ஆண்டுதோறும் அக்.1ம் தேதியை உலக முதியோர் தினமாக கடைப்பிடிக்க 1991ம் ஆண்டு ஐ.நா அறிவித்தது"





சுருங்கிய தோல்கள், மங்கிய கண்கள், நரைத்த முடி ஆகியவற்றுடன் அனைவரது குடும்பத்திலும் இருக்கின்றனர் முதியோர். வாழ்க்கைப் பயணத்தில் இவர்கள் பெற்ற குழந்தைகளுக்காக உழைத்து, முதிர்ந்த வயதில் தள்ளாடி நிற்கின்றனர். இவர்களின் உழைப்பு மற்றும் தியாகத்தை மறக்காமல், அவர்களிடம் அன்பு காட்டி அரவணைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆண்டுதோறும் அக்டோபர் 1'ம் தியதி, சர்வதேச முதியோர் தினம் கொண்டாடப்படுகிறது.

உலக மக்கள்தொகையில் 10ல் ஒருவர் 60வயதுக்கு மேற்பட்டவராக இருக்கிறார். இது, 2050ல் ஐந்தில் ஒருவராகவும், 2150ல் மூன்றில் ஒருவராகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உலகில் அதிகமான வயதானோர் வாழும் இரண்டாவது நாடாகவும் இந்தியா உள்ளது. காலம் செல்லச் செல்ல இது மேலும் அதிகரிக்கும். இந்தியாவில் இன்னமும் 72% முதியோர் தங்களின் பிள்ளைகளின் குடும்பத்தோடுதான் வாழ்கின்றனர் என்பது சந்தோஷமான செய்திதான். எனினும், 'குளோபல் ஏஜ் வாட்ச்' எனும் அமைப்பின் ஆய்வின்படி, முதியோர் நலம் பேணுகிற நாடுகளின் பட்டியலில் இந்தியா கடைசி வரிசையில் உள்ளது. இந்தியாவின் முதியோரில் 80% கிராமவாசிகள். 40% வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள். 73% பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். 90% பேருக்கு அரசின் எந்த சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும் போய்ச் சேரவில்லை. வெந்ததைத் தின்போம்; விதி வந்தால் சாவோம் என்ற மனப்போக்கில்தான் இந்திய முதியோர்கள் பொதுவாக வாழ்ந்துவருகின்றனர்.

முதியோரும், குழந்தையும் மனதால் ஒன்று எனக் கூறுவர். ஞாபக மறதி காரணமாக, நம்மிடம் கேட்டவற்றையே திரும்ப திரும்ப கேட்பர். இதற்கு அவர்களிடம் கோபம் காட்டாமல், பரிவுடன் உதவ வேண்டும். முதியோரை இதுநாள் வரை, கவனிக்க மறந்து விட்டாலும், இத்தினத்தை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி, அவர்களிடம் அன்பு செலுத்த முன் வரவேண்டும்.

**நாமும் நாளை முதியோர் ஆவோம் என்பதை மனதில் நிறுத்துங்கள்.**

# விலைமதிப்பற்ற பொக்கிஷங்களை பாதுகாப்போம்..!!

# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே..

இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் ஈடுஇணையற்ற நாமத்தில் அனைவருக்கும் அக்டோபர் மாத வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். புதிய பெலத்தோடு புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள திருச்சபை மக்களாகிய உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். சென்ற மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். ஒன்றிணைந்து ஜெபத்தாலும் தங்களுடைய விலைமதிக்கமுடியாத நேரத்தை கொடுத்ததும் செயல்பட்ட சபையின் அங்கத்தினர்களுக்கு என் அன்பின் வாழ்த்துகளும் நன்றியும் உரித்தாக்குகிறேன்.

சிறுவர்களுக்கான நீதிமொழி'வசன மனப்பாட போட்டிகள் சிறப்பாக நடத்த தேவன் கிருபைக்கூர்ந்தார். இவ்வூழியத்தை தலைமை தாங்கி நடத்தின போதகருக்கும், பெருப்பேற்று நடத்தின திருமதி.ஷாலி மெல்பின், திரு.ஹெர்சல், திருமதி.பமிலா டேனியேல், மற்றும் பங்குபெற்ற பிள்ளைகள், பிள்ளைகளை ஆயத்தப்படுத்தின பெற்றோர், சபையின் மிடியா குழு, ஒவ்வொருவருக்கும் சபையின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். இணையதளம் மூலமாக ஆண்கள் ஐக்கிய சங்கம், பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் கூடுகை, சிறுவர் வேதாகம பள்ளி கூடுகை மற்றும் ஆராதனைகளை நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பு அளித்த போதகர் ஐயா அவர்களுக்கும், அதன் பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்கள் சங்கம் முலமாக கட்டபடயிருக்கும் ஆலையதிற்காக, சிறுவர் ஊழியதின் முலமாக தாங்கப்படும் ரித்திகா என்ற குழந்தைக்காகவும், மற்றும் சபையின் வளர்ச்சிக்காகவும் உற்ச்சாகமாய்-உதாரத்துவமாய் கொடுத்துவருகிற ஒவ்வொருவருக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

அன்பானவர்களே…தாவீது அரசனைப்போல் பவுல் அப்போஸ்தலனைப்போல் கர்த்தருடைய நாமத்தை குறித்தே மேன்மை பாராட்டுவோம். நாம் இவ்வுலகில் பெற்றுள்ள எந்தநன்மையும் தேவன் நமக்கு ஈவாக தந்தது; எனவே நம்மை இந்த உலகில் ஆசீர்வதித்து நடத்துகின்ற தேவனை உயர்த்துவோம்...இப்புதிய மாதத்தில் தெய்வ பயத்துடன் கர்த்தரோடு தொடர்ந்து நிலைத்திருப்போம்.

இறையாசி உங்களுடன் தங்கி இருப்பதாக.

இப்படிக்கு …கிறிஸ்துவின் பணியில்…

Suresh Rajan . . .




EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE

TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343

**Email: csitcalain@gmail.com**

**Web: csitamilparishalain.org**

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY